# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report

# 2019

ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

வெகுசன ஊடக அமைச்சு

Ministry of Mass Media

# 2019ஆம் ஆண்டுக்கானவருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## செலவினத் தலைப்பு இல : 55

2020.01.30 ஆம் திகதிபொது நிதித் திணைக்களத்தினால் அறிமுகம் செய்யப்பட் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது

# பொருளடக்கம்

| ***உள்ளடக்கம்*** | ***பக்கம்*** |
|---|---|
| அத்தியாயம் *01*– நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு | 1 - 18 |
| அத்தியாயம் *02* – முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் | 19 - 28 |
| அத்தியாயம் *03* – வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை | 29 - 48 |
| அத்தியாயம் *04* – செயலாற்றுகை சுட்டிகள் | 49 - 52 |
| அத்தியாயம் *05*– பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* அடையும் செயலாற்றுகை | 53 - 56 |
| அத்தியாயம் *06* – மனித வள விபரம் | 57 - 62 |
| அத்தியாயம் *07*– இணக்க அறிக்கை | 63 - 73 |

# அத்தியாயம் 01

## நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

## நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு

1.1. அறிமுகம்

1.2. நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

1.3. பிரதான செயற்பாடுகள்

1.4. நிறுவன விளக்கப்படம்

1.5. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

1.6. நிறுவனங்கள் /அமைச்சின்கீழுள்ளநிதியங்கள்

1.7. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் *(இருப்பின்)*

அ*)* கருத்திட்டத்தின் பெயர்

ஆ*)* கொடைவழங்கும் முகவர்

இ*)* கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ரூபாமில்.

ஈ*)* கருத்திட்டக் காலம்

## 1.1. அறிமுகம்

சமூக நலனுக்காக வெகுசன ஊடக அமைச்சினால் ஆற்றப்படும் பணி மகத்தானது. தகவலை அறிந்துகொள்வதிலுள்ள ஆர்வமுள்ள சமூகத்திற்கு வெகுசன ஊடகத்துறை நன்கு அறியப்பட்ட ஒரு துறையாக காணப்படுகின்றது. மக்கள் மனதை இனம்கண்டுள்ள சிறந்த ஊடகங்கள் நாட்டுக்குரிய ஒரு வளமாக மாத்திரமன்றி நாட்டின் வெற்றிக்காக அபிவிருத்தி செயன்முறையை இயக்கும் செயலூக்கமுள்ள கருவியொன்றாகும்.

பொறுப்புவாய்ந்த ஒழுக்கு விழுமியமுள்ள ஊடக கலாசாரமொன்றை உருவாக்கும் பொருட்டு அதற்குத் தேவையான சட்ட விதிகளுக்குரிய கொள்கைகளை வகுத்து ஊடக சுதந்திரத்தைப் பேணுவது வெகுசன ஊடக அமைச்சின் மிக முக்கியமான பணியாகும். பொதுமக்களுக்கு தகவல் அறியும் உரிமை மற்றும் வெளியீட்டின் போதும் கருத்துத் தெரிவிக்கின்ற போதும் உள்ள சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கும் இந்த அமைச்சினால் முக்கிய பங்காற்றப்படுகின்றது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை (RTI) நடைமுறைப்படுத்தல், ஜனாதிபதி ஊடக விருது விழாவை நடாத்துதல் மற்றும் ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டத்தை (வரைவு) தயாரித்தல்போன்ற விசேட கருத்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஊடகவியலாளர்களை அறிவு மற்றும் அனுபவத்தைக் கொண்டு போஷித்து அவர்களது ஆற்றல்களை மெருகூட்டுவதற்கும் ஊடகத் துறையின் அபிவிருத்திக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் அமைச்சின் பணியாகும். "எசிதிசி" புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக அந்த இலக்கு யதார்த்தமாகியது.

இலங்கை திருநாட்டை சகல வளங்களையும் கொண்டு பேஷிக்கப்பட்ட தேசமாக கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை வகுத்து அதனை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அரசாங்கத்தின் இந்த செயன்முறையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் வெகுசன ஊடகங்களின் போக்கை ஒழுங்கமைப்பது வெகுசன ஊடக அமைச்சின் முக்கிய பொறுப்பாகும்.

வெகுசன ஊடக அமைச்சின் விடயதானம் கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் திருத்தங்களுக்கு உட்பட்டது. 2017.06.09 ஆம் திகதிய 2022/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெகுசன ஊடக அமைச்சின் விடயதானத்திற்குரிய 11 நிறுவனங்கள் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.

2018.02.20 ஆம் திகதிய 2059/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் தகவல் அறியும் உரிமைப் பற்றிய ஆணைக்குழுவும் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் விடயதானத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

2019.02.26 ஆம் திகதிய 2112/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர் ஒருவரின் கீழ் வெகுசன ஊடக அமைச்சு பெயரிடப்பட்டதோடு அரசாங்க தகவல் திணைக்களம் மற்றும் தகவல் அறியும் ஆணைக்குழு உள்ளிட்ட வெகுசன ஊடகத் துறையுடன் தொடர்புற்ற 9 நிறுவனங்களின் எண்ணிக்கை 9 ஆக உயர்ந்தது. 2019.12.10 ஆம் திகதிய 2153/12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்படி நிறுவனங்கள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் பெயரிடப்பட்டது.

## 1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

### தூரநோக்கு

"நன்றாக அறிவூட்டப்பட்ட பல்லின மற்றும் முனைப்பான சமூகம்."

### பணிக்கூற்று

"மக்கள் நேயமுடன் கூடிய, அபிவிருத்தியை நோக்கிய சுதந்திரமானதும்பொறுப்புவாய்ந்ததுமான இலங்கைக்கான ஊடக கலாச்சாரத்தை ஸ்தாபிப்பதற்காக, வசதிகளை அளித்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் பின்னூட்டல்"

### குறிக்கோள்கள்

1. சிறந்த வெகுசன ஊடக கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்
2. பொதுமக்களுக்கு தகவல்களை அடைந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தல்.
3. ஊடகத் துறையை நவீன தொழில்நுட்பத்துடன்; நாளதுவரைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல்.
4. ஊடகத் தொழிற்துறையாளர்களின் தொழில் அந்தஸ்தை உயர்த்துவதற்கு உடந்தையாக இருத்தல்.
5. தேசிய அபிவிருத்தி முயற்சியில் ஊடகப் பங்களிப்பு மற்றும் பங்கேற்பை அதிகரித்தல்.
6. சர்வதேச ரீதியாக நாட்டின் நற்பெயரை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.
7. அமைச்சின் நோக்கங்களை அடைவதற்கு தேவையான மனிதவள அபிவிருத்தியை கட்டியெழுப்புதல்.
8. அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் சொத்துக்களை பயனுள்ள விதத்தில் பயன்படுத்தல்.
9. ஏற்புடை தரப்பினர்களை ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலம் மொத்த அபிவிருத்தி செயன்முறையையும் வலுவூட்டல்.

## 1.3 பிரதான செயற்பாடுகள்

(2019.12.10ஆம் திகதிய இல2153/12 எனும் வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம்)

1. தேசிய கொள்கைச் சட்டகத்திற்கு ஏற்ற வகையில் ஊடக துறைக்கு ஏற்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை திட்டமிடுதல், நடைமுறைப்படுத்தல், மதிப்பீடு செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் பின்னூட்டம் செய்தல்.
2. பொதுமக்கள் எண்ணப்பாடுகளை சிறந்த இலக்குகளை நோக்கி மையப்படுத்தி பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளின் முற்போக்கு அணியாக வெகுசன ஊடகத்தின் பங்களிப்பை வழங்குவதற்கு தேவையான மூலோபாயங்களை வகுத்தல்.
3. பொதுமக்களிடத்தில் அறிவு, எண்ணப்பாடுகள் மற்றும் இரசனையை ஏற்படுத்தும் பொருட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
4. பொதுமக்களுக்கு சரியான தகவல்களை அறிந்துகொள்வதற்கு உள்ள உரிமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
5. உயர்ந்த ஊடக விழுமியங்களை ஏற்படுத்தும் பொருட்டு தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்;படுத்துதல்.

## 1.4 நிறுவன விளக்கப்படம்

### வெகுசன ஊடக அமைச்சு




| ஏனைய பதவிகள் : | அனுமதிக்கப் பட்ட | | அனுமதிக்கப் பட்ட |
|---|---|---|---|
| கருத்திட்ட நடைமுறைப்படுத்தும் உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர் | 39 | முகாமைத்துவ உதவியாளர் | 22 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 03 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) உத்தியோகத்தர் | 01 |
| புலனாய்வு உத்தியோகத்தர் (இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகம்) | 13 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) உதவியாளர் | 03 |
| வரவேற்பு உத்தியோகத்தர் | 01 | உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01 |
| சாரதி | 18 | அலுவலக உதவியாளர் | 20 |

**அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை - 145**

**உண்மையான ஆளணி – 102**

மூலம் : முகா.சே. திணை.–2019.05.15 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைய

## 1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்/ திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

**அரசாங்க தகவல் திணைக்களம்**

அரசாங்க தகவல் திணைக்களம் 1948 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்கத்தின் அபிவிருத்தி செயன்முறைகள் உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நடப்பு விடயங்கள் மற்றும் பொதுமக்களுக்காக அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பெதுமக்களை அறிவூட்டுவது இந்தத் திணைக்களத்தின் பிரதான பணியாகும். பூகோல தொழில்நுட்ப போக்குகளுக்கு இசைவாக்கமடைந்து தகவல் தொழில்நுட்ப செயன்முறையை முகாமை செய்து சுதந்திர மற்றும் பொறுப்புள்ள உயர் ஊடக கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கு உடந்தையாக இருப்பதும் தலைமைத்துவத்தை வழங்குவதும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரதான குறிக்கோள்களாகும்.

## 1.6 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்

01. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
02. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
03. வ/ப சுயாதீன ரூபவாஹினி ஊடக வலையமைப்பு
04. வ/ ப ஐக்கிய பத்திரிகைக் கம்பனி
05. இலங்கைப் பத்திரிகைப் பேரவை
06. செலசினே ரூபவாஹினி நிறுவனம்
07. இலங்கை பத்திரிகை நிறுவனம்
08. மஹிந்த ராஜபக்ஷ தேசிய டெலி சினிமாப் பூங்கா
09. இலங்கை ஊடக பயிற்சி நிறுவனம்
10. தகவல் அறியும் உரிமைப் பற்றிய ஆணைக்குழு

### 1.6.1. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

1949 ஆம் ஆண்டு ஒக்டோபர் 01 ஆம் திகதி ஒலிபரப்பு திணைக்களம் எனும் சுயாதீன நிறுவனமாக நிறுவப்பட்ட இந்த நிறுவனம் 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம்திகதி குடியரசு அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்ட பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதன் பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஒலிபரப்பு தொடர்பாடலில் முற்போக்கு முன்னணி ஊடக வலையமைப்பாக நேயர்களை மையப்படுத்தி அந்தந்த சமூக தேவைப்பாடுகளை அடையாளம் கண்டு "வசதியளிப்பாளராக" பொதுமக்களின் பல்வேறுபட்ட தேவைப்பாடுகளை நிவர்த்திக்கும் இலத்திரனியல் ஊடக வலையமைப்பாக மாறியுள்ளது. அத்தோடு, நீள் அலைவரிசை, மத்திய அலைவரிசை, சிற்றலை மற்றும் FM அலைவரிசைகள் ஊடாக உள்நாட்டு ஒலிபரப்பு வலையமைப்பில் தேசிய அலைவரிசைகள் 06 ஐயும், பிராந்திய அலைவரிசைகள் 07 ஐயும்சமூக வானொலிச் சேவை ஒன்றையும் கொண்டு சேவைகளை மேற்கொண்டு வருகின்றது. அவ்வாறே ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பிரதான ஒலிபரப்பு நிலையங்கள் 09 ஊடாக நாடு முழுவதும் ஒலிபரப்பப்படுகின்றது. மேலும், புத்தளம் மற்றும் திருகோணமலை மீள் ஒலிபரப்பு நிலையங்கள் ஊடாக வெளிநாட்டு ஒலிபரப்பு சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நம்பகமான மற்றும் விசுவாசமான ஊடகப் பணியை மேற்கொண்டு வரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேயர்களோடு நெருக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு இணையத்தளத்தினூடாக சர்வதேசத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது.1966 ஆம் ஆண்டு 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் செயற்பாடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

### 1.6.2 இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் 1982 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ளதுஇந்த நாட்டில்ஒளிபரப்பு பிரச்சார சேவையொன்றை கொண்டு நடாத்தும் பணி மற்றும் அந்த சேவையை அபிவிருத்தி செய்தல், விரிவுபடுத்தல் மற்றும் விருத்தி செய்தல் மற்றும் அதனுடன் இடைதேர்வான விடயங்களுக்கும் சட்டத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகளுக்குள் நிகழ்சிகளை தயாரித்தல் மற்றும் ஒளிபரப்புச் செய்தல் உள்ளடங்குகின்றது. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் "ஐ" மற்றும் "நேத்ரா" ஆகிய மூன்று அலைவரிசைகள் ஊடக தமது நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்றது. துரிதமாக மாற்றமடைந்து வரும் தொலைக்காட்சி தொழில்நுட்பத்திற்கு இசைவாக்கம் அடைந்து பார்வையாளர்களுக்கு உயர் தரத்திலான படைப்புக்களை வழங்குவதற்கு தேசிய தொலைக்காட்சி என்ற ரீதியில் தேசிய பொறுப்பு நிறைவேற்றப்படுகின்றது. மூன்று தசாப்த காலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விருதுகளை வென்றெடுத்த நிகழ்ச்சிகளை தயாரித்து மற்றும் செய்திகளை வழங்கி பார்வையாளர்களின் இரசனை மற்றும் அறிவுக்கு விருந்தளிப்பதற்கு இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு இயலுமாகியுள்ளது. அத்தோடு நாட்டில் நடைபெறும் அபிவிருத்தி தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டுவதற்கு ரூபவாஹினி, Eye மற்றும் நேத்திரா அலைவரிசைகள் ஊடாக அரச ஊடகம் என்ற வகையில் ரூபவாஹினி கூட்டுத்தாபனம் தனது பணியை செய்துள்ளது.

### 1.6.3 வ/ப சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு

1979 ஆம் ஆண்டு தனது செயற்பாடுகளை ஆரம்பித்த சுயாதீன ஊடக வலையமைப்பு தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகத் துறையினுள் இலங்கையின் முன்னணி ஊடக வலையமைப்பொன்றாக தனது பணிகளை மேற்கொண்டு வருகின்றது. வ/ப சுயாதீன ஊடக வலையமைப்பு ITN அரசாங்கத்திற்குச் சொந்தமான பொதுக் கம்பனி ஒன்றாக கொண்டுநடாத்தப்படுகின்றது. இலங்கை ரசிகர்களுக்காக சுயாதீன தொலைக்காட்சி – ITN மற்றும் வசந்தம் TV என இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகளும் ITN மற்றும் வசந்தம் FM

எனும் வானொலிச் சேவைகள் இரண்டும் கொண்டுநடாத்தப்படுகின்றது. கடந்த சில வருடங்களுக்குள் மிகவும் பலமான தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடக வலையமைப்பாக சுயாதீன ஊடக வலையமைப்பு விருத்தியடைந்துள்ளதோடு, இலங்கை பூராகவும் ஒளிபரப்பப்படுகின்ற பலமான ஒளிபரப்பு சக்தியைக் கொண்டுள்ளது. ஆரம்ப கட்டத்திலிருந்து உயர் தரத்திலான நிகழ்ச்சிகளை தமது ரசிகர்களுக்கு வழங்குவதற்கு சுயாதீன தொலைக்காட்சி சேவை ஆற்றல் பெற்றிருந்தது. இலங்கையின் கலாசாரம், சமூக மற்றும் சமய விழுமியங்களை பேணிய வண்ணம் குடும்ப அலைவரிசையாக நற்பெயரையும் கௌரவத்தையும் உயர் வரவேற்பையும் பெற்றுள்ளது.

### 1.6.4 வ/ப ஐக்கிய பத்திரிகைகள் நிறுவனம்

“லேக் ஹவுஸ்”எனும் பெயர்கொண்டு அழைக்கப்படும் வகூப ஐக்கிய பத்திரிகைகள் நிறுவனம் 1926 ஆம் ஆண்டு இலங்கையில் நிறுவப்பட்ட அரசாங்கத்துக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட கம்பனியாகும். 1973 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க வகூப ஐக்கிய பத்திரிகைகள் நிறுவன (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் 100% உரிமை அரசாங்கத்தின் சார்பில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் நிதியத் திணைக்களத்திற்கு உரியது.தற்போது லேக்ஹவுஸ் நிறுவனம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழியிலும் பத்திரிகைகளை வெளியிட்டு அச்சு ஊடக நிறுவனங்களுக்கு இடையில் முன்னோடி ஊடாக நிறுவனமாக மாறியுள்ளது. இணையத்தளம் கையடக்க தொலைப்பேசிக்குள் ஊடுருவிய பின்னர் தினமின, டேலி நியுஸ் மற்றும் தினகரன் செய்தித்தாள்களின் கையடக்க மென்பொருள்களை வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, இணையத்தளம் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக லேக்ஹவுஸ் வெப் பக்கத்தை பயன்படுத்துபவர்களுக்கு கூடிய பொழுதுபோக்கு ரசனையுடன் செய்திகளை வெளியிடுவதற்கு புதிய ஒலிக்கூடமொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஒரு நூற்றாண்டுக்கும் கிட்டிய தனது பயணப் பாதையில் ஊடகக் கைத்தொழிலில் புரட்சிகரமாக தனது இடத்தை லேக்ஹவுஸ் நிறுவனம் உறுதிப்படுத்திக்கொண்டுள்ளது. தேசிய நிறுவனமொன்றாக ஊடகக் கைத்தொழிலைப் போன்று நாட்டின் நலன் கருதி செயற்படுதல் மற்றும் அந்த நோக்கத்தின் அடிப்படையில் நிறுவனத்தின் தொடர்ந்தேர்ச்சியான முன்னேற்றத்தை அடைந்துகொள்வது லேக்ஹவுஸ் நிறுவனத்தின் முக்கிய செயற்பாடாகும்.

### 1.6.5 இலங்கை பத்திரிகைப் பேரவை

1973 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகைப் பேரவைச் சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ள இலங்கை பத்திரிகைப் பேரவை இந்த அமைச்சின் கீழ் இயங்கும் நியதிச்சட்ட நிறுவனமாகும்.

பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது இந்தச் சபையின் முக்கிய நோக்கமாக காணப்படுவதோடு, அந்த சுதந்திரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதை தடுத்தல், பத்திரிகைகளின் உள்ளடக்கத்தின் தரத்தை கூட்டுதல், பொதுமக்கள் உண்மையான விடயங்களை அறிந்துகொள்வதற்கு உள்ள உரிமையை உறுதிசெய்தல் போன்ற நோக்கங்களை கொண்டுள்ளது.

பத்திரிகை செய்திகளில் பிரசுரிக்கப்படும் சில விவாதத்திற்குரிய விடயங்கள் தொடர்பாக விழுமிய ரீதியாக ஊடகவியலாளர்களை தயார்படுத்தி ஏதேனும் சட்டமுறையான பிரவேசத்தினூடாக ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஊடகவியலாளர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அவர்களது தொழில் ரீதியான தரத்தைக் கூட்டுவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பத்திரிகைகளை முறைமைப்படுத்தல், பத்திரிகை தயாரிப்பு மற்றும் பிரசுரிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள சகல பிரிவுகளுக்குமிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு உடந்தையாக இருத்தல், பத்திரிகைப் பாவனை மற்றும் பத்திரிகைகளின் அவசியப்பாடு தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளல், பத்திரிகை தொழிற் துறைக்கு ஆட்சேரப்பு முறைகள், நலனோம்பல், கல்வி மற்றும் பயிற்சிகளை மேம்படுத்தல் மற்றும் பத்திரிகையை கொண்டுநடாத்துவதுடன் தொடர்புடைய எந்தவொரு விடயம் தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பது பத்திரிகைப் பேரவையின் பொறுப்பாகும்.

### 1.6.6 செலசினே தொலைக்காட்சி நிறுவனம்

அப்போது திட்ட அமுலாக்கல் அமைச்சின் கீழ் செலசினே தொலைக்காட்சி நிறுவனம் 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.இல 979/2மற்றும் 1997.06.09ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலைத் தொடர்ந்து இது வரையில் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. இந்த நிறுவனம் அடிப்படையில் அரசாங்க விளம்பரங்களை வெளியிடும் நிறுவனமாகும். அத்தோடு நிகழ்ச்சி முகாமைத்துவ நிறுவனமாகவும் செயற்படுகின்றது. சுயாதீன சட்ட முறையான நிறுவனமொன்றாக நிறுவப்படாத போதிலும்

2007 இல 07 எனும் கம்பனிகள் சட்டத்தின் கீழும் திறைசேரியின் செயலாளருக்கு 100% உரிமையையும் கொண்ட பிணையத்தின் மீது வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக நிறுவுவதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

### 1.6.7 லங்கா புவத் நிறுவனம்

லங்கா புவத் நிறுவனம் சர்வதேச செய்தி முகவர் நிறுவனங்களுக்கு இணைவாக 1978 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2007 இல 07 எனும் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள சட்டமுறையான அதிகாரமுள்ள நிறுவனமொன்றாகும். இந்த நிறுவனம் இலங்கையில் வெ ளிநாட்டு செய்தி முகவர் நிறுவனமாக (Foreign News Agency) வெளிநாட்டுச் செய்தி முகவர்களுடன் செயற்பட்ட போதிலும் கடந்த நான்கு வருடங்களில் அதன் பணி ஸ்தம்பித்துள்ளது. தற்போது லங்கா புவத் நிறுவனம் செயலிழந்துள்ளதோடு மொபிடல் நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தித்திற்கு அமைய குறுஞ்செய்திச் சேவையொன்றை (SMS Alert) நடாத்திச் செல்வதோடு இணையத்திலும் செய்திகளை இற்றைப்படுத்துகின்றது. இந்த நிறுவனம் வருமானம் உழைக்கும் பிரிவொன்றாக லங்கா புவத் என்ற பெயரை சர்வதேசமயப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

### 1.6.8 மஹிந்த ராஜபக்ஷ தேசிய டெலி சினிமாப் பூங்கா

மஹிந்த ராஜபக்ஷ தேசிய டெலி சினிமாப் பூங்கா2010 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சர்வதேச மட்டத்தில் ஆசிய பிராந்தியத்தில் சினிமாக் கைத்தொழிலில் படப்பிடிப்பு இடமொன்றாக சர்வதேச அளவில் பிரசித்திபெற்ற இடமொன்றாக பிரபல்யப்படுத்தும் நீண்டகால நோக்கில் உள்நாட்டு சினிமாத் துறையின் வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் இந்த டெலி சினிமாப் பூங்கா அமைக்கப்ட்டது.

மஹிந்த ராஜபக்ஷ தேசிய டெலி சினிமாப் பூங்காசட்ட ரீதியாக நிறுவனமொன்றாக சட்டதினால் நிறுவப்படாத போதிலும் தற்போது வெகுசன ஊடக அமைச்சின் கீழ் மேற்பார்வை செய்யப்படும் நிறுவனமொன்றாக இயங்கிவருகின்றது. இதனை முறையாக நிறுவும் வரையில் இதன் பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஆளுநர் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைளை வினைத்திறனுடன் மற்றும் வர்த்தக அடிப்படையில் முன்னெடுத்துச் செல்வதற்கும் அங்கு மேற்கொள்ளப்படும் டெலி தயாரிப்புக்களை சர்வதேச தரத்திற்கு அமைய உயர் மட்டத்தில் மற்றும நவீன

தொழில்நுட்பத்துடன் கூடிய வசதிகளைக் கொண்ட நிறுவனமொன்றாக நிறுவுவதற்கான யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டு ஆளுநர் சபையின் கருத்துக்கு அமைய மஹிந்த ராஜபக்ஷ தேசிய டெலி சினிமாப் பூங்காமன்றம் எனும் சட்டம் இந்த அமைச்சினால் வரைவு செய்யப்பட்டுள்ளது.

### 1.6.9 இலங்கை ஊடக பயிற்சி நிலையம்

தொலைக்காட்சி ஊடகம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டபோது அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்ப கலைஞர்களை பயிற்றுவிப்பதற்காக தொலைக்காட்சி ஊடகத் துறையில் ஈடுபடும் பயிலுநர்களுக்கு தேவையாக பயிற்சிகளை மற்றும் அறிவை வழங்கும் பொருட்டு 1982 ஆம் ஆண்டு ஜேர்மன் அரசின் நிதியுதவியுடன் இலங்கை ரூபவாஹினி பயிற்சி நிறுவனம் (SLTTI) எனும் பெயரில் நிறுவனமொன்று தாபிக்கப்பட்டது. 2010 ஏப்ரல் 30 ஆம் திகதிய 1651/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2011 நவம்பர் 16 ஆம் திகதி இந்த நிறுவனம் வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அதன் பின்னர் 2007 இல 07 எனும் கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2014 மார்ச் 05 ஆம் திகதி வெகுசன ஊடக விடயம் தொடர்பான அரசாங்கத்தின் ஒரே பயிற்சி நிறுவனமாக பாரிய அளவில் அபிவிருத்தி செய்யும் நோக்கில் இலங்கை ஊடகப் பயிற்சி நிறுவனமாக வெகுசன ஊடக அமைச்சின் கீழ் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஊடக பயிற்சி நிறுவனம் தொலைக்காட்சித் துறைக்கு ஏற்புடைய தொழில்நுட்ப பயிற்சியை வழங்குவதோடு அதற்கு அப்பால் சென்று வானொலி,சினிமா மற்றும் அச்சு ஊடகம் உள்ளிட்ட ஏனைய ஊடகத் துறைகளில்ஈடுபட்டுள்ளவர்ளுக்கு பயிற்சியளிக்கும் நிறுவனமாகவும் செயற்பட்டுள்ளது. 2019.02.26 ஆம்திகதிய 2112/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் இந்த நிறுவனம் அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர் ஒருவரின் கீழ் ஒப்படைக்கப்பட்ட வெகுசன ஊடக அமைச்சின் விடப் பரப்பிற்குள் பட்டியலிடப்படவில்லை. எனினும் 2019.12.10 ஆம் திகதிய 2153/12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் மீண்டும் வெகுசன ஊடக அமைச்சின் விடப் பரப்பிற்குள் சேர்க்கப்பட்டுள்ளது.தற்போது இந்த நிறுவனம் செயலூக்கத்துடன் செயற்படவில்லை. ஆயினும் ஊடகவியலாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு உயர் கல்வி நிறுவனமொன்றை நிறுவுவதற்கு சிறந்த இடமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

### 1.6.10 தகவல் அறியும் ஆணைக்குழு

2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் தகவல் அறியும் ஆணைக்குழு பொது அதிகாரசபைகளை கண்காணிக்கும் மற்றும் தகவல் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனமாக நிறுவப்பட்டது. சட்டரீதியாக சுயாதீன நிறுவனமான இயங்குவதோடு தகவல் உரிமைச் சட்டத்திற்கு ஏற்புடையதாகாத முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு உரிமையுள்ள அதன் ஏற்பாடுகளை மீறும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு சிபாரிசு செய்வதற்கான அதிகாரம் உள்ளது.மேலும் சட்டத்தின் மூலம் குற்றங்களை புரியக்கூடியவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் அதிகாரமும் உண்டு.

சட்டத்தின் கீழ் பொது அதிகாரசபைகள் மூலம் தனது கடமைகளுக்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பது பற்றி மதிப்பீடு செய்யும் ஆணைக்குழுவுக்கு உரியது. ஏதேனும் பொது அதிகாரசபைக்கு தேவையான பொதுவான சீர்திருத்தம் மற்றும் விசேடமான சீர்திருத்தங்கள் ஆகியவற்றுக்கு சிபாரிசுகளை முன்வைப்பதற்கும் தகவல்களை வழங்குவதற்கு அரசாங்க நிறுவனங்களுக்கு நியாயமான கட்டணம் தொடர்பில் அறிவுறுத்தல் வழங்குவதற்கும் இலவசமாக தகவல்களை வழங்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களை சிபாரிசு செய்வதற்கும் கட்டண அட்டவணையை சிபாரிசு செய்வதற்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்வதற்கும் வழிநடாத்துவதற்கும் சட்டத்தின் கீழ் உரிமை மற்றும் தேவைப்பாடுகளை பிரசித்திப்படுத்துவதற்கும் அவ்வாறே அரசாங்க நிறுவனங்களினால் உரிய முறையில் அறிக்கைகளை வைத்திருப்பதற்கும் தேவையான அறிவுறுத்தல் கோவைகளை வெளியிடுவதற்கும் ஆணைக்குழுவுக்கு கடப்பாடு உண்டு.

சட்டத்தின் கீழ் மேன்முறையீடுகளை விசாரணை செய்வதற்கும் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு. இதன் கீழ் எவரேனும் ஒரு ஆளை சத்தியக்கடதாசி / உறுதிமொழி மீது விசாரணை செய்வதற்கும் அவரது பொறுப்பிலுள்ள எந்தவொரு தகவலையும் வெளியிடுவதற்கான அதிகாரம் உண்டு. (விசேட தகவல்கள் இரகசியமாக விசாரணைக்கு உட்படுத்தப்படும்) சட்டத்தினால் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளிட்ட எந்தவொரு அரசாங்க நிறுவனத்திலும் காணப்படும் தகவலைப் பரிசோதிக்கும் உரிமையும் ஆணைக்குழுவுக்கு உண்டு. ஏதேனுமொரு முறையில் தகவல்களை வழங்குவதற்கு அரசாங்க நிறுவனமொன்றுக்கு அறிவுரை வழங்குவதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு. பொதுமக்களுக்கு வழங்கக்கூடாத தகவல்களை வெளியிடுவதற்கு (விசேட விடயங்கள் தவிர்ந்த) ஏதேனும் அரசாங்க நிறுவனத்திற்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கும் அதிகாரம் உண்டு. ஏதேனும்

தகவலை வழங்குவதில் தாமதம் நிகழுமிடத்து பிரஜை ஒருவரிடமிருந்து அறவிடப்பட்ட ஏதேனும் தொகையை மீண்டும் வழங்குமாற்று ஏதேனும் அரசாங்க நிறுவனத்தைக் கோருவதற்கும் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு (15 ஆம் பிரிவு)

**1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் *(இருப்பின்)***

1.7.1 *அ)* கருத்திட்டத்தின் பெயர்: யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு தகவல் அறியும் மற்றும் உரிமை ஊக்குவிப்பு கருத்திட்டம்.

ஆ*)* கொடைவழங்கும் முகவர்:சுவிற்சலாந்து அரசு

இ*)* கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ரூபாமில்.4.5

ஈ*)* கருத்திட்டக் காலம்: 2018 மே–2019ஆகஸ்ட்

1.7.2 *அ)* கருத்திட்டத்தின் பெயர்: இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகளை விருத்தி செய்யும் கருத்திட்டம்.

ஆ*)* கொடைவழங்கும் முகவர்: ஜப்பான் அரசு (JICA)

இ*)* கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ரூபாமில் 101.6

ஈ*)* கருத்திட்டக் காலம்: 2017 – 2022

# அத்தியாயம் 02

## முன்னேற்ற மற்றும்
## எதிர்கால கண்ணோட்டம்

## 2.1 வெற்றிகள்

### 2.1.1 2016 இல12 தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமு றைப்படுத்தல்.

இலங்கை பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி முதல் அமுலாக்கப்படும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அதனை சமூகமயப்படுத்தும் பொறுப்பு வெகுசன ஊடக அமைச்சுக்குரியதாகும். 2017 பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி முதல் இந்தச் சட்டம் செயற்பட ஆரம்பித்துள்ளது. அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தகவல்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் உரிமையை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டின் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சிக் கோட்பாடுகளை நன்றாக செயற்படுத்துவதும் அதனூடாக ஊழலற்ற சிறந்த பொறுப்புள்ள அரசாங்க சேவையை நிறுவுவதும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இந்தச் சட்டத் தை சமூகமயப்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து வெகுசன ஊடக அமைச்சு முனைப்புடன் பங்களிப்புச் செய்துள்ளது.

2019 ஆம் ஆண்டில் தகவல் அறியும் உரிமைப் பற்றி சிறந்த அறிவை பிரஜைகளுக்கு வழங்கும் நோக்கில்“கிராமத்திற்கு தகவல் உரிமை”RTI நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டுள்ளன. அதனூடாக தகவல் அறியும் உரிமை மற்றும் அதன் முக்கியத்துவம் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. தகவல் சட்டம் அமுல்படுத்தப்பட்ட கடந்த இரு வருடங்களில் சட்டத்தின் செயற்பாடு தொடர்பில் தகவல் உத்தியோகத்தர்களின் அனுபவங்கள் வாயிலாக தகவல் உத்தியோகத்தர்களுக்கான வழிகாட்டு நெறிக் கோவையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. தகவல் சட்டத்திற்கு ஏற்புடைய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பங்கள் நிகழ்நிலை வழியாக (RTI Online Tracking System) அறிமுகம் செய்வதற்காக தகவல் சட்டத்திற்கு அமைய தெரிவு செய்யப்பட்ட சில அமைச்சுக்களில் முற்போக்கான தகவல்களை சமர்ப்பிப்பது தொடர்பிலான முன்னோடி கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தகவல்களை முற்போக்கான முறையில் தொழில்நுட்ப மற்றும் இலத்திரனியல் முறையில் தயாரிப்பதற்கான ஆலோசனை நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP)அனுசரணை வழங்கியுள்ளது. பல நிறுவனங்கள் தமது இணையத்தளத்தை புதுப்பித்துள்ளன. “நாட்டுக்காக ஒன்றாக இருப்போம்” தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைவாக அரசாங்க சேவையை கிராமத்திற்குச் கொண்டுசெல்லும் பொதுமக்கள்

சேவையின் விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடகவும் தகவல் அறியும் உரிமைப் பற்றி அறிவூட்டப்பட்டுள்ளது. தகவல் சட்டம் பற்றிய பயிற்சியளிப்பதற்காக பயிற்றுவிப்பாளர் குழாமொன்றும் தாபிக்கப்பட்டுள்ளது. தகவல் உரிமைச் சட்டம் தொடர்பில் சமூகத் தலைவர்களை பயிற்றுவிப்பதும் சட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அமைச்சுச் செயலாளர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர். மேலும், சிவில் செயற்பாட்டாளர்களின் சந்திப்பும் நடாத்தப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு ஏற்புடையவாறு அமைச்சினால் “பவன” பத்திரிகை மாதாந்தம் வெளியிடப்பட்டுள்ளது. தகவல் சட்டத்தின் பயன்பாடு தொடர்பில் நாடளாவிய ரீதியில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2019 செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி வரையிலான காலப் பகுதி “தகவல் மாதமாக” பிரகடனம் செய்யப்பட்டு அதற்கு இணைவாக பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

### 2.1.2 தொலைக்காட்சி மற்றும் வானொலி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதை கண்காணிப்பதற்காக ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுச் சட்டத்தை வரைவு செய்தல்

இலங்கையில் வானொலி ஒலிபரப்பு மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்பு செய்யும் அதிகாரத்தை வழங்கும் சட்டமாக 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டமாகும். தனியார் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் செயற்பாடும் இந்த இரு சட்டங்களினதும் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்படுகின்றன.

அதற்கிணங்க, வெகுசன ஊடக அமைச்சினால் தனியார் ஒலிபரப்பு அனுமதிப்பத்திரங்கள் 27 உம் தொலைக்காட்சி ஒளிபரப்பு அனுமதிப்பத்திரங்கள் 54 உம் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும் தற்போது தொலைக்காட்சி ஒளிபரப்பு அனுமதிப்பத்திரங்கள் 28 உம் தனியார் வானொலி ஒலிபரப்பு அனுமதிப்பத்திரங்கள் 18 உம் மாத்திரம் பயன்பாட்டில் உள்ளன.

அவ்வாறு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் நிலவிய பிரச்சினைகளை பரிசீலனைக்கு எடுத்து எதிர்காலத்தில் அந்த அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயன்முறையை மற்றும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதன் மூலம் அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் பற்றிய விடயங்களைப் பரிசீலித்து “ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுச் சட்டத்தை” வரைவு செய்து புதிய சட்டமொன்றாக இயற்றுவதற்கான இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 2.1.3 ஜனாதிபதி ஊடக விருது விழா – 2018

பொதுமக்களுக்கான தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்தி நாட்டின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளும் பொருட்டு பொறுப்புடன் பங்களிப்புச் செய்தல் ஊடக கொள்கைகள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த இலக்குகளை அடைந்துகொள்ளும் பொருட்டு வெகுசன ஊடகத்துறையில் உயர் தரங்களைப் பேணவேண்டியது அத்தியவசியமாகும். நேயர்களின் எதிர்பார்ப்புக்கள் மீது பொறுப்புணர்வுடனும் சுயாதீனமாகவும் கூறுணர்வுடனும் அச்சு மற்றும் இலத்திரனியல் மற்றும் இணையத்தள உள்ளடக்கங்களைப் பேணிவருவதற்கு ஊடவியலாளர்களை ஊக்கப்படுத்தல் வேண்டும். அதற்கிணங்க, வெகுசன ஊடக அமைச்சினால் ஜனாதிபதி ஊடக விருது விழாவொன்றை நடாத்த வேண்டுமென இனம்கண்டு நாட்டில் சிறந்த ஊடக வழமையொன்றை / கலாசரமொன்றைத் உருவாக்கும் நோக்கில் இலங்கை ஊடக ஆளுமைகளினால் மேற்கொள்ளப்பட்ட செயலாற்றுகை மற்றும் பங்களிப்பை பாராட்டும் வகையில் 2019 ஏப்ரல் மாதம் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் விருது வழங்கும் விழாவொன்று வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

### 2.1.4 எசிதிஸி வெகுசன ஊடக புலமைப் பரிசில் திட்டம்

ஊடகவியலாளர்களின் தொழில் தரத்தை விருத்தி செய்யும் நோக்கில் எசிதிஸி புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.இந்த நிகழ்ச்சித்திட்டத்தினூடாக நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் ஊடகத் தொழில் புரிவோருக்கு உயர் கல்விக்கான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக 5 மில். ரூபா தேசிய வரவுசெலவுத் திட்டத்தினால் ஒதுக்கப்பட்டது.அதன் மூலம் 109 ஊடகவியாளாலர்கள் புலமைப் பரிசிலுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

### 2.1.5 இறக்குமதி செய்யப்பட்ட டெலி நாடகங்கள் மற்றும் திரைப்படங்களுக்கு வர்த்தக வரி நிகழ்ச்சித்திட்டத்திற்கு வரி அறவிடுதல்.

இந்த அமைச்சினால் 2016 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கு அமைய தொலைக்காட்சி அலைவரிசைகள் மூலம் ஒளிபரப்புச் செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு வரி அறவிடப்படும்.

2019 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட்டெலி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழச்சிகள் 5296 க்கு தடைநீக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதோடு அறவிடப்பட்ட வரித்தொகை ரூ.மில். 687.10 ஆகும். இந்தப் பணிக்காக ஆய்வுச் சபையின் உறுப்பினர்கள் 21 பேர் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு நாளாந்தம் மூவரைக் கொண்ட உப குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன. அவை 321 தடவைகளில் தடைநீக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 2.1.6 அமரதேவ ஆசிரமத்தை நிர்மாணித்தல்

இந்த கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் அரசாங்கத்தின் பல்வேறுபட்ட பெறுகை நடைமுறையின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்ட போதிலும் அந்த நிர்மாணப் பணிகள் தொடர்பில் திருப்தியடைய முடியாத காரணத்தினால் ஆலோசணை நிறுவனமான பொறியியல் பணிகள் பற்றிய மத்திய ஆலோசணைப் பணியகத்தின் அறிவுரைக்கு அமைய ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டதோடு, எதிர்காலத்தில் முறையான பெறுகை நடைமுறைகளைப் பயன்படுத்தி வேறு நிர்மாணிப்பு நிறுவனமொன்றினூடாக மேல் நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

### 2.1.7 மஹிந்த ராஜபக்ஷ தேசிய டெலி சினிமாப் பூங்கா

உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மற்றும் சூழல் நேயமிக்க அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் டெலி சினிமாப் பூங்கா ரூ.மில். 9.145 வருமானம் உழைத்துள்ளது.

### 2.1.8 பொதுத் திறைசேரியின் மானியங்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றம்.

#### 2.1.8.1 சுயாதீன ரூபவாஹினி ஊடக வலையமைப்பு

வசந்தம் டிவி அலைவரிசை இந்த நாட்டு தமிழ் பேசும் இலங்கை வாழ் மக்களுக்கு தெளிவான காட்சிகளை கண்டுகளிப்பதற்காக மற்றும் உள்நாட்டு தமிழ் நிகழ்ச்சிகளை தயாரித்து ஒளிபரப்புவதற்கும் ஏற்ற வகையில் மேம்படுத்தும் இரண்டுவருட கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூமில். 304 ஆகும். 2019 ஆம் ஆண்டுக்குள் யாழ்ப்பாண பரிமாற்ற நிலையத்தை மேம்படுத்துவதன் மூலம் ஒளிபரப்பு பிரதேசத்தை அதிகரித்துக்கொள்ள

முடிந்துள்ளது. 2019 ஆம் வருடத்திற்குள் எதிர்பார்த்த நிதியங்கள் கிடைக்கப்பெறாத காரணத்தினால் கருத்திட்டத்தின் காலத்தை 3 வருடங்கள் வரை நீடிப்பதற்கு ஏற்பட்டது.

### 2.1.8.2 இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

கலையக தயாரிப்பு மற்றும் செய்தி கலையகங்களின் செயற்பாட்டுத் தரம், இயைந்துகொடுக்கக்கூடிய மற்றும் செலவு வினைத்திறனை அதிகரித்தல், வெளி ஒளிபரப்பு நிலையங்களின் செயற்பாடுகளின் தரம் மற்றும் வினைத்திறனை அதிகரித்தல், தொலைக்காட்சி அலைவரிசைகளின் ஆட்புல ஒளிபரப்பை விருத்தி செய்தல், புதிய ஊடகப் பாவனையை அதிகரித்தல் மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்பை விருத்தி செய்யும் கருத்திட்டம் இந்த வருடத்தினுள் முன்னெடுக்கப்படும்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை விருத்தி செய்வதற்காக கலாசார பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற ஜப்பான் அரசின் கல்வி மற்றும் விவரண நிகழ்ச்சிகள் 449 ஐ இலஙகை ரசிகர்களுக்கு சிங்கள மற்றும் தமிழ் மொழியில் மொழிமாற்றம் செய்து / உப தலைப்பு இட்டு ஒளிபரப்பு செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த தரப்பினரின் நிதியங்களிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

### 2.1.8.3 இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

யாழ் FM சேவைக்காக கலையக கட்டிடத் தொகுதியொன்றை அமைக்கும் அடிப்படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இணைப்பு அறைகள் மற்றும் பலநோக்கு அறைகளை நாளதுவரைப்படுத்தும் நடவடிக்கைகள், ஒலிபரப்புக் கூடங்களை பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் மற்றும் கனிணி வலையமைப்பு கருத்திட்டம் என்பன நிறைவு செய்யப்பட்டுள்ளன.

### 2.1.8.4 தகவல் அறியும் உரிமைப் பற்றிய ஆணைக்குழு

2019 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட பொதுமக்கள் முறைப்பாடுகளில் 1089 இல் 709 முறைப்பாடுகள், அதாவது 65% தொடர்பில் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. சுவிற்சலாந்து அரசின் நிதியுதவியின் கீழ் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட

மற்றும் பின்தங்கிய சமூகங்களுக்கு தகவல் அறியும் உரிமையை ஊக்குவிக்கும் கருத்திட்டத்தின் கீழ் 07 வெளியீடுகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. மேலும் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் பின்தங்கிய சமூகங்கள் மற்றும் தகவல் உத்தியோகத்தர்களுக்கு மாகாண ஆலோசணை சந்தர்ப்பங்கள் மற்றும் மேன்முறையீடுகள் தொடர்பில் தலையீடு செய்யப்பட்டது. சிவில் சமூக அமைப்புக்கள், சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் பங்கேற்புடன் 07 மாவட்டங்களின் பொதுமக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாகாண ஆலோசனை மற்றும் மேன்முறையீடுகளை விசாரிக்கும் செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன.

#### 2.1.8.5 இலங்கை பத்திரிகைப் பேரவை

பத்திரிகைகளை பதிவுசெய்தல், பத்திரிகை முறைப்பாடுகளை விசாரணை செய்தல், பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வுகளை நடாத்துதல், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு செயலமர்வுகளை நடாத்துவதற்கு மேலதிகமாக பத்திரிகைக் கலை தொடர்பான டிப்ளோமா பாடநெறியை நடாத்திச் செல்வதற்கு மேலதிகமாக 2019 ஆம் ஆண்டில் பத்திரிகை கலை பற்றிய சான்றிதழ் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொடர்பாடல் கல்வி கலைச்சொற் தொகுதி வெளியிடப்பட்டது.

## 2.2 சவால்கள்

### 2.2.1 இலங்கைரூபவாஹினிஒளிபரப்புநடவடிக்கைகளுக்காகஎண்ணியல்(Digital) தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல்.

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள தொடர்முறை (Analog)தொழில்நுட்பத்திற்குப் பதிலாக உலகின் பல நாடுகள் புதிய தொழில்நுட்ப நிலமையின் கீழ் விருத்தி செய்யப்பட்ட டிஜிட்டல் தொழில்நுட்பத்தை தொலைக்காட்சித் துறையிலும் அறிமுகம் செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும். விசேடமாக தொடர்முறை தொழில்நுட்பம் மறைந்து செல்வதினால் அந்த தொழில்நுட்பத்தின் மீதான ஒளிபரப்பு உபகரணங்கள் எதிர்காலத்தில் பராமரிப்பது பிரச்சினைக்குரியது. மேலும் எண்சார்ந்த தொழில்நுட்பம் அறிமுகம் செய்ததன் மூலம் புதிய அதிர்வெண் வீச்சை மிக வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. தொடர்முறை முறைக்கு பரிமாற்றம் செய்யப்படும் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு தேவையான அதிர்வெண் வீச்சின் மூலம் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம்

தொலைக்காட்சி அலைவரிசைகள் அதிக எண்ணிக்கையை ஒளிபரப்புச் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதனால் தொழிற்பாட்டுச் செலவினம் அதிகளவில் குறைவடையும்.

### 2.2.2 ஊடகவியலாளர்களின் தொழில்வான்மையை மேம்படுத்தல்

தற்காலத்தில் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பாத்திரங்களில் மிகவும் சக்திமிக்க மற்றும் தீர்க்கமான காரணியாக ஊடகம் மாறியுள்ளது. மக்களுக்கு தகவல்களை அடையச் செய்யும் பொருட்டு வெகுசன ஊடகத்துறை நேர்முறையான பங்களிப்பை வழங்குகின்றது. அதன் மூலம் நல்லாட்சியை கொண்டு செல்வல முடியும்.
இலங்கையில் சனநாயகத்தைப் பாதுகாப்பதை உறுதிசெய்யும் போது சுதந்திரமான, சுயாதீனமான மற்றும் மக்கள் நேயமிக்க ஊடக கலாசாரமொன்றை கட்டியெழுப்புவது அவசியமாகும். இந்தப் பணிக்காக நல்லாட்சி பற்றிய செயன்முறையை நல்லாட்சியையும், சனநாயகத்தையும் வலுப்படுத்துவதில் ஊடக தரப்புக்க பாரிய பங்கு உண்டு. நாட்டில் காணப்படும் பல்லின மற்றும் திறந்த ஊடக கலாசாரத்தை நிறுவும் பொருட்டு தொழில்மறை ரீதியில் வலுவான ஊடக சமூகமொன்று காணப்படுதல் வேண்டும். கடந்த இரண்டு தசாப்த காலத்தில் தொழில்முறை ஊடகவியலாளர்களை உருவாக்கும் நிறுவனமொன்றை நிறுவும் முயற்சி வெற்றியளிக்கவில்லை.

ஊடகங்கள் சமூகங்களுக்கு பொறுப்புக்கூறவேண்டியிருப்பதனால் உயர் ஊடக தரங்களைப் பேணி வருவதை உறுதி செய்யும் வகையில் ஏற்புடைய ஊடக ஒழுக்க விழுமியங்களுக்கு ஏற்ப தொழில்முறை ஊடகவியலாளர்களை உருவாக்குவதன் மூலம் சிறந்த ஊடகப் பாவனையின் உச்சத்தை அடைந்துகொள்வதற்கு சமூகப் பொறுப்பை மேற்கொள்ளும் தேசிய நிறுவனமொன்றை நிறுவுவதற்கு முன்மொழியப்படுகின்றது.

நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மற்றும் சர்வதேச போக்குகள் காரணமாக வெகுசன ஊடக துறையில் அடிக்கடி மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அவ்வாறான மாற்றங்களை செய்யும் போது தொழில் அபிவிருத்தி, திறன் விருத்தி மற்றும் திறமைகளை விருத்தி செய்வதற்காக தொடர்ச்சியான கல்வி நிறுவனமொன்றை நிறுவுவது அத்தியவசியமாகும். அதற்கிணங்க உத்தேச ஊடக நிறுவனத்தை நிறுவுவது கட்டாய அவசியமாகும்.

### 2.2.3. பக்கச்சார்பு அற்ற தரமுறையொன்றை அறிமுகம் செய்தல்.

ஒலிபரப்பு மற்றும் விளம்பர பிரச்சாரத்தின் போது ஒலிபரப்பு தரங்கள் தீர்க்கமான காரணியாக மாறியுள்ளது. அது பாரிய அளவிலான விளம்பர நிறுவனங்களைப் பாதிக்கும். ஒலிபரப்பு

நிலையங்களின் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தும் போது உள்ளடக்கத்தைக்கூட சவாலுக்கு உட்படுத்தக்கூடிய பொருளாதார அறிவாற்றல் சம்மற்ற வீதத்தில் கட்டுப்படுத்தும் ஆற்றல் தரப்படுத்தும் தரவுகளுக்கு உண்டு. அரசாங்க வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள் மாத்திரம் இருந்த காலப்பகுதியில் தரப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை. ஒளிபரப்பு துறையின் எல்லைகளை தளர்த்திய பின்னர் தனியார் நிறுவனங்களுக்கு இடம் வழங்கிய பின்னர் தரப்படுத்தல் முறை ஆரம்பமானது. விளம்பரகாரர்களினால் தரப்படுத்தல் விரிவாக பயன்படுத்தப்பட்ட போதிலும் சில ஒளிபரப்பு நிறுவனங்கள் இந்த முறைதொடர்பில் திருப்தியுடன் இல்லை. எனவே, இந்த அமைச்சினால் பக்கச்சார்பற்ற தரப்படுத்தல் முறையொன்று அறிமுகம் செய்யப்படுதல் வேண்டும்.

### 2.2.4 ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டத்தை அறிமுகம் செய்தல்.

தொழில்நுட்ப மற்றும் சட்ட ரீதியான நிலைகளில் நிகழும் மாற்றங்கள் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது தற்காலத்தில் காணப்படும் பொறிமுறையில் உள்ள ஒழுங்கீனம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் காணப்படும் சிக்கல் தன்மை அவ்வாறே எதிர்காலத்தில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஊடகங்களின் நடத்தையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க மற்றும் தனியார் ஊடக நிறுவனங்கள் ஆகிய இரு தரப்பினரையும் வழிநடாத்துவதற்கு சுயாதீன நிறுவனமொன்று இருத்தல் வேண்டும் என அவதானிப்புச் செய்யப்படுகின்றது.

## 2.3 எதிர்கால இலக்குகள்

i. ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையில் பெறுப்பேற்றல் மற்றும் பொறுப்புக்கூறல் உள்ள ஊடக கலாசாரமொன்றை உருவாக்குவதற்குத் தேவையான ஒழுங்குபடுத்துதல்களை நடைமுறைப்படுத்தல்.
ii. நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் தகவல் அறியும் வழியை விரிவுபடுத்தல்.
iii. ஊடகவியலாளர்களை அறிவு மற்றும் அனுபவத்தால் வலுப்படுத்தல்.

கைப்பட்

செயலாளர்

தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு - பதவி முத்திரை

# அத்தியாயம் 03

## 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆந் திகதிக்கு ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

## 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திதிக்கு ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று

ஏசீஏ -எப்

2019 டிசம்பர் *31* முடிவுற்ற காலத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ரூபா

| வ. செ. திட்டம் (2019) | | குறிப்பு | உண்மையான 2019 ரூ. | 2018 ரூ | |
|---|---|---|---|---|---|
| - | **வருமான பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | 615,000,272 | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள், சேவைகளுக்கான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரி | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியல்லா வருமானம் மற்றும் பிற | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | **மொத்த வருமான பெறுகைகள்*(அ)*** | | 615,000,272 | - | ஏசீஏ-1 |
| - | **வருமானமல்லாத பெறுகைகள்** | | | | |
| - | திறைசேரி முற்பணம் | | 190,255,000 | | *ஏசீஏ -3* |
| - | வைப்புகள் | | 8,670,154 | | *ஏசீஏ -4* |
| - | முற்பணக் கணக்குகள் | | 8,319,728 | | *ஏசீஏ -5* |
| - | வேறு பெறுகைகள் | | 3,458,281 | | |
| - | **மொத்த வருமானமல்லாத பெறுகைகள்*(ஆ)*** | | 210,703,163 | | |
| - | **மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள்இ = *(அ)+(ஆ)*** | | **825,703,435** | | |
| | **கழி*:* செலவினம்** | | | | |
| - | மீண்டெழும் செலவினம் | | | | |
| - | வேதனம், சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர் நலன்கள் | 5 | 72,204,327 | | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய பெருட்கள் மற்றும் சேவைகள் | 6 | 94,938,853 | | ஏசீஏ-2(ii) |
| - | மானியங்கள், ஒதுக்கீடுகள் மற்றும் மாற்றல் | 7 | 431,030,954 | | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக்கொடுப்பனவுகள் | 8 | | | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினங்கள் | 9 | | | |
| | **மொத்த மீண்டுவரும் செலவினங்கள் (ஈ)** | | **598,174,134** | | |

| | | | |
|---|---|---|---|
| **மூலதனச் செலவுகள் (உ)** | | | |
| மூலதனச்சொத்துக்கள் மேம்பாடும் புனரமைப்பும் | 10 | 4,217,429 | ஏசீஏ-2(ii) |
| மூலதனச் சொத்துக்கள்கையகப்படுத்தல் | 11 | 3,465,800 | |
| மூலதன மாற்றல்கள் | 12 | 308,623,510 | |
| நிதி மாற்றல்களை கையகப்படுத்தல் | 13 | - | |
| திறன் விருத்தி | 14 | 11,481,319 | |
| ஏனைய மூலதனச் செலவுகள் | 15 | 18,469,586 | |
| **மொத்த மூலதனச் செலவுகள் (உ)** | | **346,257,644** | |
| பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ) | | | |
| வைப்புக் கொடுப்பனவுகள் | | 1,159,311 | ஏசிஏ-4 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | | 10,810,183 | ஏசீஏ-5 |
| மொத்தச்செலவினம்எ=(ஈ+உ+ஊ) | | 956,401,272 | |
| 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பண மீதி ஏ=(இ-எ) | | (130,697,837) | |

## 3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

**ஏசீஏ-பி**

### 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|---|
| **நிதி அல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | **ஏசீஏ-6** | 11,734,358 | - |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | **ஏசீஏ-5/5(அ)** | 20,462,589 | - |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | **ஏசீஏ-3** | 261,903 | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **32,458,850** | - |

| | | | |
|---|---|---|---|
| **மொத்த சொத்துக்கள்** | | 10,045,674 | |
| <u>**நிகர சொத்து / பங்கு**</u> | | | |
| சொத்து,பொறித்தொகுதி உபகரண ஒதுக்கு | | 11,734,358 | - |
| வாடகை, பணி முற்பண ஒதுக்கு | **ஏசீஏ-5(ஆ)** | - | - |
| <u>**நடைமுறை பொறுப்புக்கள்**</u> | | | |
| வைப்புக் கணக்கு | **ஏசீஏ-4** | 10,416,915 | - |
| முற்பண மீதி | **ஏசீஏ-3** | 261,903 | - |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **32,458,850** | - |

மேலே உள்ள ஏ.சி.ஏ வடிவத்தில் எண் *1* முதல் *6* வரை சமர்ப்பிக்கப்பட்ட விரிவான கணக்கு அறிக்கைகள் மற்றும் 4முதல் 49வரையான பக்கங்களில் வழங்கப்பட்ட கணக்குகளுக்கான குறிப்புகள் 50 முதல் 59வரையான பக்கங்களில் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும்.இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.இறுதிக் கணக்கின் புள்ளிவிவரங்கள், தொடர்புடைய கணக்கியல் குறிப்புகள் மற்றும் பிற கணக்கியல் தகவல்கள் திறைசேரி கணக்கு புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதுடன் இந்த புள்ளிவிவரங்களுடன் உடன்படுகின்றன என்பதை நாங்கள் இதன்மூலம் சான்றளிக்கிறோம்.

கையொப்பமிட்டது

பிரதான கணக்கீட்டு அலுவலர்
டபிள்யூ. ஏ. சூளானந்த பெரேரா
செயலாளர்

கணக்கீட்டு அலுவலர்
எஸ். ஆர். டபிள்யூ. எம். ஆர். பீ. சத்குமார
மேலதிக செயலாளர் (நிர்வாகம்)

பிரதான நிதி அலுவலர்/
பிரதான கணக்காளர் எஸ். ஏ. என். ஆர். சுபசிங்க

## 3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

**ஏசீஏ-சீ**

**2019 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலப்பகுதிக்கான**

**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | உண்மையான 2019 ரூ. | 2018 ரூ. |
|---|---|---|
| <u>தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்து காசுப் பாயச்சல்</u> | | |
| மொத்த வரி பெறுகைகள் | 400,994,577 | |
| கட்டனம்,அபராதம், தண்டப்பணம், உரிமங்கள் | - | |
| இலாபம் | - | |
| வருமானமல்லாத பெறுகைகள் | - | |
| ஏனைய தலைப்புக்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் | 3,458,281 | |
| திறைசேரி முற்பணம் | 190,255,000 | |
| **தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (அ)** | **594,707,858** | |
| <u>**கழி - காசு செலவிடல்:**</u> | | |
| ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவு | 149,658,949 | |
| மானியம் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள் | 1,213,165 | |
| பிறசெலவின தலைப்புகளுக்கான செலவினம் | 160,259 | |
| திறைசேரிக்கு செலுத்தப்பட்ட முற்பணம் | 401,930,186 | |
| **தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்டமொத்த காசுப் பாய்ச்சல் (ஆ)** | **552,962,559** | |
| **தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்டதேறிய காசுப் பாய்ச்சல் (இ )=(அ)-(ஆ)** | **41,745,299** | |
| <u>முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டமொத்த காசு</u> | | |
| வட்டி | - | |
| பங்கிலாபம் | - | |
| சொத்து விற்பனை, பௌதிக ஆதன விற்பனை | - | |
| கடன் அறவீடுகள் | - | |
| முற்பண அறவீடுகள் | 3,435,521 | |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டகாசு(ஈ)** | **3,435,521** | |

| | |
|---|---|
| <u>கழி - காசு செலவிடல்</u> | |
| பௌதிக சொத்து கொள்வனவு அல்லது நிர்மானம் | 51,149,399 |
| வேறு முதலீடுகளை கையகப்படுத்தல் | - |
| முற்பண கொடுப்பனவுகள் | 3,494,165 |
| **முதலீட்டு செயற்பாட்டுக்காகசெலவிடப்பட்டமொத்த காசுப் பாய்ச்சல்(உ)** | **54,643,564** |
| **முதலீட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய காசு(ஊ)=(ஈ)-(உ)** | **(51,208,043)** |
| **தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு(எ)=(இ) + (ஊ)** | **(9,462,744)** |
| <u>**நிதி செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்**</u> | |
| உள்நாட்டு கடன்பெறுகை | - |
| வெளிநாட்டு கடன்பெறுகை | - |
| கிடைத்த நன்கொடைகள் | |
| பெறப்பட்ட வைப்புக்கள் | 8,485,584 |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டமொத்த காசு *(ஏ)*** | **8,485,584** |
| <u>கழி - காசு செலவிடல்</u> | |
| உள்நாட்டு கடன்பெறுகை மீள்கொடுப்பனவு | - |
| வெளிநாட்டு கடன்பெறுகைமீள்கொடுப்பனவு | - |
| வைப்புக் கொடுப்பனவுகள் | 747,681 |
| **நிதி செயற்பாடுக்காக செலவிடப்பட்ட மொத்த காசு *(ஐ)*** | **747,681** |
| **நிதி செயற்பாடிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு (ஒ)=(ஏ)-(ஐ)** | **7,737,903** |
| **காசில் தேறிய மாற்றம் (ஓ) = (எ) –(ஒ)** | **(1,724,841)** |
| **மே *01* அன்று ஆரம்ப காசு மீதி *** | 1,986,744 |
| **டிசம்பர் *31*அன்று இறுதி காசு மீதி** | **261,903** |

